©
GOVERNMENT OF TAMIL NADU
2025

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No.197/2009.
[Price: Rs. 3.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 25A] சென்னை, சனிக்கிழமை, ஜனவரி 11, 2025
மார்கழி 27, குரோதி, திருவள்ளுவர் ஆண்டு-2055

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

பக்கங்கள்

**சட்டமுன்வடிவுகள்:**

எண். 5/2024—சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டம் .. 2–3

எண். 6/2024—தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டம் .. .. .. .. .. .. 4–6

**2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/2025**

## 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2025 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

4ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தின் 4ஆம் பிரிவில், (dd) கூறுக்கு பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– (தமிழ்நாடு சட்டம் 28/1978.)

“(ddd) அரசு துணைச் செயலாளர், நிதித் துறை, பதவி வழி;”.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1978 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 28/1978) 4 ஆம் பிரிவின் (b) கூறின் படி, நிதித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் வாரியத்தின் இயக்குநர்களில் ஒருவர் ஆவார். இருப்பினும், அதிக மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் வாரியத்தால் நிர்வகிக்கப்படும் பல்வேறு திட்டங்கள் போன்ற வாரியத்தால் கையாளப்பட வேண்டிய நிதிப் பொறுப்புகளின் அளவு அதிகமான காரணத்தால், கூறப்பட்ட வாரியத்தின் இயக்குநர்களில் ஒருவராக நிதித் துறையின் துணைச் செயலாளர் படிநிலையில் உள்ள மற்றொரு அலுவலரை நியமிப்பது கட்டாயமாகின்றது. அதற்கிணங்கிய வகையில் கருத்தில் உள்ள நோக்கத்தை எய்த, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 28/1978—ன் 4 ஆம் பிரிவினைத் தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு, முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே. என். நேரு,**
*நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை—9,
2025 ஜனவரி 11.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

**2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 11–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/2025**

## 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கான தொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஐந்தாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச்சட்டம், 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு வன (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிப்பிடப்படலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் V/1882.

**2.** 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான), 7 ஆம் பிரிவில், ''வருவாய் வாரியம்'' எனும் சொற்றொடருக்காக, "அரசால் அறிவிக்கப்படலாகும், மாவட்ட ஆட்சியர் படிநிலைக்குக் குறையாத வருவாய்த் துறையின் அத்தகைய அலுவலர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 7 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 16–A பிரிவுக்குப் பின்பு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 16–B–எனும் பிரிவினை உட்புகுத்துதல்.

16B. ஈடுசெய்யக்கூடிய காடுவளர்ப்பு நிலத்தினை ஒதுக்கக்காடாக அறிவித்தல்.– இந்தச் சட்டத்தில் உள்ளடங்கியது எது எவ்வாறு இருப்பினும், அரசு, அறிவிக்கையின் வாயிலாக, 1980 ஆம் ஆண்டு வனப் (பாதுகாப்பு மற்றும் ஊக்குவிப்பு) சட்டம் மையச் சட்டம் (69/1980) மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளின் கீழ், ஈடுசெய்யக்கூடிய காடுவளர்ப்பு நோக்கத்திற்காக, எந்த நிலத்தையும் வனத்துறைக்கு ஒதுக்கக் காடு என மாற்றப்பட்டதாக அறிவிக்கலாம்.''

**4.** முதன்மைச் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் வரம்புரையில், ''வருவாய் வாரியம்'' எனும் சொற்றொடருக்காக, ''அரசால் அறிவிக்கப்படலாகும், மாவட்ட ஆட்சியர் படிநிலைக்குக் குறையாத வருவாய்த்துறையின் அத்தகைய அலுவலர்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும். 18 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 65ஆம் பிரிவிற்காக, பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:— 65 ஆம் பிரிவிற்கான மாற்றீடு.

"65. அரசு அதிகாரங்களை ஒப்படைவு செய்யலாம்.— அரசு, அறிவிக்கையின் வாயிலாக 16, 19, 20, 22, 27 மற்றும் 58 ஆம் பிரிவுகளின் கீழ் தங்களிடம் உற்றமைந்த எந்தவொரு அதிகாரத்தையும், கூறப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்படலாகிறவாறு, மாவட்ட ஆட்சியர் படிநிலைக்குக் குறையாத வருவாய்த்துறையின் அத்தகைய அலுவலருக்கு ஒப்படைவு செய்யலாம்.''

<u>நோக்கக் காரண விளக்கவுரை</u>

வன நிலம் எதுவும் வனமற்ற நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் போதெல்லாம், பயனாளர் முகமையானது, ஈடுசெய்யக்கூடிய காடுவளர்ப்பு நோக்கத்திற்காக, குறிப்பிட்ட அளவிலான நிலத்தை வழங்குதல் வேண்டும். மேலும், அங்கீகாரம் பெற்ற ஈடுசெய்யக்கூடிய காடுவளர்ப்பு குறித்து, இந்திய அரசால் வெளியிடப்பட்ட 24.01.2023 தேதியிட்ட வழிகாட்டுதல்களின்படி, கூறப்பட்ட ஈடுசெய்யக்கூடிய காடுவளர்ப்பு நிலமானது மைய அரசால் குறிப்பிடப்படும் காலவரம்பிற்குள், பாதுகாக்கப்பட்ட வனமாக அறிவிக்கப்பட வேண்டும். எனினும், 1882 ஆம் ஆண்டு தமிழ்நாடு வனச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் V) 1882, 4 முதல் 16 வரையிலான பிரிவுகளில் வகுத்துரைக்கப்பட்ட நடைமுறைகளானது, எந்தவொரு நிலத்தையும் ஒதுக்கக்காடுகளாக (பாதுகாக்கப்பட்ட வனம் போன்று) அறிவிப்பதற்கு, விரிவானதாகவும் காலதாமதம் ஏற்படுவதாகவும் உள்ளன. எனவே, இது ஈடுசெய்யக்கூடிய காடுவளர்ப்பு நிலங்களை ஒதுக்கக்காடுகளாக விரைவாக அறிவிப்பதன் பொருட்டு, கூறப்பட்ட சட்டத்தின் 16–A பிரிவில் உள்ளவாறு சிறப்புவகை முறை ஒன்றைச் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேலும், தமிழ்நாடு சட்டம் V/1882இன்கீழ் ஒரு நிலத்தை ஒதுக்கக்காடாக அமைப்பதற்கு, ஒன்று அந்தச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் அவர்களின் நோக்கத்தை அறிவிப்பதற்கும், மற்றொன்று அந்தச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அந்த நிலத்தை ஒதுக்கக்காடாக அறிவிப்பதற்கும் என அரசு, இரண்டு அறிவிப்புகளை வெளியிட வேண்டியுள்ளது. அரசால், மேற்சொன்ன இரண்டு சந்தர்ப்பங்களில் அறிவிக்கைகளை வெளியிட வேண்டியதன் காரணமாக, ஒதுக்கக்காடு அமைப்பதில் கணிசமான தாமதம் ஏற்பட்டுள்ளதால், கூறப்பட்ட சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கை வெளியிடுவதற்கு, கூறப்பட்ட சட்டத்தின் 65 ஆம் பிரிவை திருத்தம் செய்வதன் மூலம், மாவட்ட ஆட்சியர் படிநிலைக்குக் குறையாத வருவாய்த் துறை அலுவலருக்கு அரசின் அதிகாரங்களை ஒப்படைவு செய்வது தேவை எனக் கருதப்படுகிறது.

3. எனவே, அரசானது, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் V/1882–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர். க. பொன்முடி,**
*வனத்துறை அமைச்சர் .*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்ட முன் வடிவின் 1 (2), 2, 3, 4 மற்றும் 5 ஆம் பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக, அறிவிக்கைகளை வெளியிடுவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கின்றது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**முனைவர். க. பொன்முடி,**
*வனத்துறை அமைச்சர் .*

தலைமைச் செயலகம்,
சென்னை–9,
2025 ஜனவரி 11.

கி. சீனிவாசன்,
*முதன்மைச் செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.